www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம் : 3.00 மணி

## வணிகவியல்

மதிப்பெண்கள் : 90

பகுதி - அ காஞ்சிபுரம் மாவட்டம்

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. வியாபாரம் மற்றும் வணிகம் ________ பேரரசில் பொதுவானவையாக இருந்தது.
அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) சேரர்

2. மருத்துவர் தொழில் என்பது ________.
அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத் தொழில் ஈ) தனியார் வணிகம்

3. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது ________.
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தொழிலமைப்பு இல்லாதது?
அ) கூட்டுப் பங்கு நிறுமம் ஆ) தனியாள் வணிகம்
இ) அரசு நிறுமம் ஈ) கூட்டுறவு

5. ________ சட்டத்தின்படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சா வழி சொத்தில் உரிமையுள்ளவர்கள்.
அ) இந்து சட்டம் ஆ) மிட்டக்சரா சட்டம்
இ) தயாபாகா சட்டம் ஈ) மேற்கண்ட அனைத்தும்

6. நிறுமத்தின் இயக்குநரை கீழ்க்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
அ) கடனீந்தோர் ஆ) கடனாளர் இ) கடனீட்டுப் பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்

7. நுகர்வோர் கூட்டுறவு ________ முதன் முதலாக வெற்றி பெற்றது.
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா

8. கோகோ கோலா நிறுவனத்தை எதற்கு உதாரணமாய் கூறலாம்?
அ) பன்னாட்டு நிறுமம் ஆ) அரசு நிறுமம் இ) இணை நிறுமம் ஈ) பொதுத்துறை நிறுமம்

9. ஒரு அரசாங்க நிறுவனம் எவர் பெயரில் பங்குகளை வாங்குகிறது?
அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர்
இ) இந்திய தலைமை நீதிபதி ஈ) மாநில முதலமைச்சர்

10. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1 ________ ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
அ) 1936 ஆ) 1935 இ) 1934 ஈ) 1933

11. கீழ்க்கண்டவற்றுள் எது தொழில்துறை வங்கி அல்ல?
அ) ICICI அ) HSBC இ) SIDBI ஈ) IDBI

12. RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஆ) 50,000
இ) 2 லட்சம் ஈ) 5 லட்சம்

13. பண்டகக் காப்பகம் ________ மையமாக பொருட்களை வைத்திருக்கிறது.
அ) சந்தையிடுதல் அ) வரிசைப்படுத்துதல் இ) வழங்கல் இ) விற்பனை செய்தல்

14. வான்வழி அனுப்பீட்டு ரசீது ________ அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது.
அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

15. காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு ________ ஆகும்.
அ) மிக்க நம்பிக்கை அ) கூட்டுறவு இ) பகர உரிமை ஈ) அண்மைக் காரணம்

16. புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை ________.
அ) உற்பத்தி திறன் ஆ) செலவு குறைப்பு இ) திறன் ஈ) அலகுகள்

17. பின்வருவனவற்றில் எது ஊழியர்களின் சமூக பொறுப்புணர்வு ஆகாது?
அ) நியாயமான ஊதியம் ஆ) சரியான வசதிகள்
இ) சமூகப்பாதுகாப்பு ஈ) சுரண்டல்

18. நெறிமுறைகளுக்கான தேவைகள் ________.
அ) உயர்மட்ட மேலாண்மை ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்
இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



19. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் ________.
அ) கடனீந்தோர்
ஆ) உரிமையாளர்கள்
இ) கடனாளிகள்
ஈ) இவை எதுவுமில்லை

20. அமெரிக்க சந்தை தவிர்த்து உலக சந்தையில் வெளியிடப்படும் வைப்பு இரசீது
அ) உலகளாவிய வைப்பு இரசீது
ஆ) பன்னாட்டு வைப்பு இரசீது
இ) வெளிச்சந்தை வைப்பு இரசீது
ஈ) மாற்றுப் பத்திரம்

## பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. பண்டமாற்று முறை என்றால் என்ன?
22. கர்த்தா என்பவர் யார்?
23. நிறுமம் வரைவிலக்கணம் தருக.
24. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
25. பன்னாட்டு நிறுமத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளைக் கூறுக.
26. துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.
27. வணிக வங்கிகளின் பொருள் தருக.
28. பண்டகக் காப்பகங்களின் இரண்டு பணிகள் குறிப்பிடுக.
29. சமூக அதிகாரம் என்பதன் பொருள் தருக.
30. வைப்பு ரசீது என்றால் என்ன?

## பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.
32. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33. கூட்டுறவின் குறைபாடுகளை விவரி. (எவையேனும் 3)
34. இந்திய பன்னாட்டு நிறுவனங்கள் ஏதேனும் மூன்றைக் குறிப்பிடுக.
35. அரசு நிறுமம் என்றால் என்ன?
36. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?
37. மின்னணு வங்கியியல் என்றால் என்ன?
38. இந்திய காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம் (IRDAI) என்றால் என்ன?
39. வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகவியல் ஏற்படுத்தும் தாக்கம் யாவை?
40. தொழில் நிதியியல் - வரைவிலக்கணம் தருக.

## பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) உலகளாவிய வைப்ப, ரசீதுக்கும் அமெரிக்க வைப்பு ரசீதுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

42. அ) உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)
*(அல்லது)*
ஆ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

43. அ) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் யாவை? *(அல்லது)*
ஆ) பெரு நிறுவன ஆளுகையின் நன்மைகளைக் குறிப்பிடுக.

44. அ) கூட்டுறவின் கொள்கைகளை விளக்குக. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) தனி உரிமையியலின் நன்மைகளைக் கூறுக. (ஏதேனும் 5)

45. அ) பொது கழகத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) காப்பீட்டின் வகைகளை விவரி. (ஏதேனும் 5)

46. அ) பண்டகக் காப்பின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விவரி. (ஏதேனும் 5)

47. அ) வணிக வங்கிகளால் நிகழ்த்தப்படும் பல்வேறு வகையான முதன்மை செயல்பாடுகளைப் பற்றி விவரி. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் யாவை?

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593